அந்த வகையில்தான் காஞ்சிபுரத்தில் ஏற்பட்ட நோயும். காலராவாக இருக்கலாம் என்று எண்ணி, அவர்களுக்கு தடுப்பு நடவடிக்கையாக காலரா நோய்க்குள்ள மருந்து கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் 727 பேர்கள். அனைவருக்கும் காலரா நோய் ஏற்படவில்லை.

Blood Bank for Otteri.

*47 *Q.*—THIRU R. R. MUNUSWAMY : Will the Hon. the Minister for Public Health be pleased to state :—

(*a*) whether it is a fact that a full-fledged blood bank has been opened in the T. B. Hospital, Otteri, Madras ; and

(*b*) if so, the details thereof ;

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) & (இ) இரத்தம் செலுத்தும் முறையிலும் புத்துயிர் கொடுக்கும் முறையிலும் பயிற்சி பெற்ற ஒரு மருத்துவ அதிகாரியின் பொறுப்பிலும் மற்றும் சார்ந்துள்ள அலுவலர்களுடனும் ஒரு குருதி சேமிப்பு நிலையம் ஓட்டேரியிலுள்ள காசநோய் மருத்துவ மனையில் 4—9—1971 முதல் இயங்கி வருகிறது.

திரு. ரா. ரா. முனுசாமி: தலைவரவர்களே, ஓட்டேரி காசநோய் மருத்துவ மனையில் குருதி சேமிப்பு நிலையம் அமைக்கப்பட்டிருப்பதைப் போன்று தமிழகத்திலுள்ள மற்ற சில வட்டாரங்களிலும் கூட குருதி சேமிப்பு நிலையங்களை ஏற்படுத்த அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, குருதி சேமிப்பு நிலையங்களை அமைக்கும் ஏற்பாட்டினை வசதியான இடங்களில் படிப்படியாக விஸ்தரிக்க வேண்டும் என்பதுதான் அரசின் கொள்கை. குருதி சேமிப்பு நிலையத்தை அமைத்த பின் அங்கே இரத்தம் கொடுப்பதற்கு ஆள் இல்லாமல் போனால் அதனால் பயனில்லை. எனவே இரத்தம் கொடுக்க முன்வருபவர்களின் எண்ணிக்கையைப் பொறுத்து, வசதியான இடங்களில் புதிதாக குருதி சேமிப்பு நிலையங்களை அமைக்க அரசு தக்க நடவடிக்கையினை எடுக்கும்.

DR. H. V. HANDE : While it is a welcome thing that a Blood Bank has been opened in the Otteri Hospital, since this hospital is in the heart of the City of Madras unlike the Tambaram Sanatorium and because of that many patients prefer this Hospital to avoid transport difficulties, etc., will it be possible for the Government to think seriously about upgrading this hospital and making it a pucca institution so that the blood bank could be utilised properly and serve more people more effectively ?

1972 டிசம்பர் 6]

THE HON. THIRU K. ANBAZHAGAN : Sir, T. B. treatment is not completely based on provision of beds and therefore providing beds is possible only in certain areas where we can get wide space and other necessary facilities for the people treated there like Perunthurai and other sanatoria. This hospital is linked with the Education department and most of the people connected with it are highly specialised in the subject.

உட்லண்ட்ஸ் ஓட்டல் தொழிலாளிகள்.

*48 வினா.—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

சென்னை மயிலாப்பூர் உட்லண்ட்ஸ் ஓட்டலில் பணியாற்றும் தொழிலாளர்களில் பலர் போதிய நாட்கள் பணிபுரிந்தும் நிரந்தரம் செய்யப் படாமல் இருக்கிறார்களா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : உட்லண்ட்ஸ் ஓட்டலில் சுமார் 307 தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர். அவர்களுள் 213 பேர் 6 திங்கள் காலப்பணி முடித்தவர்கள். 94 பேர் 6 திங்கள் காலப்பணியை இன்னும் முடிக்காதவர்கள். பணியை முறைப்படுத்துவதென்னும் கோட்பாடு ஓட்டல் தொழிலில் பொதுவாகப் பின்பற்றப்படுவதில்லை. எனவே, அவர்கள் ஆறு திங்கள் கால அளவுப் பணியை முடித்தவுடன் அவர்களுடைய பணி நிலையானதாக்கப்பட்டுள்ளது என்பதற்கு எழுத்துமூலமான ஆணை எதுவும் தொழிலாளர்களுக்கு வழங்கப்படுவதில்லை. ஆறு திங்கள் கால அளவுப் பணியை முடித்த பின் தொழிலாளர் ஒருவர், தவறான முறையில் தமது பணி இறுதி செய்யப்படுவதற்கு எதிராக மேல் முறையீடு செய்துகொள் வதற்குத் தகுதியுடையவராவார்.

திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, இந்த நிலை உட்லண்ட்ஸ் ஓட்டலில் பணி செய்யும் தொழிலாளர்களுக்கு மட்டுமல்ல ; எல்லா ஓட்டல் தொழிலாளர்களுக்கும், அவர்கள் ஆறு மாதம் பணி புரிந்திருந்தால், அவர்களை நிரந்தரமான பணியாளர்களாக்க வேண்டும். ஆனால் ஓட்டல் முதலாளிகள் அவர்களை ஆறாவது மாதம் வரும்போது வேலை நீக்கம் செய்யப்பட்டதாக காட்டிவிடுகிறார்கள். இப்படிப்பட்ட இடையூறுகள் ஏற்படாவண்ணம் இருக்க " மே" தின விழாவில் ஓட்டல் தொழிலாளர்கள் நடத்திய கூட்டத்தில் பங்குகொண்டு உரையாற்றிய நமது மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சரவர்கள், 'ஒருவர் வேலையில் சேர்ந்தவுடன் அவருக்கு சர்வீஸ் " கார்டு " கொடுத்துவிட வேண்டும். அந்த கார்ட்டின் படி ஆறு மாதம் ஆனவுடன் அவர் நிரந்தரமாக்கப்பட வேண்டும்' என்று குறிப்பிட்டார்கள். அந்தக் கருத்தை அரசாங்கம் உடனடியாக செயல்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவரவர்களே, உறுப்பினர் அவர்களுடைய இந்தக் கருத்து அரசினரால் தக்கநேரத்தில் ஆய்வு செய்யப் படும்.